*8*

# கிறிஸ்தவ சுயாதீனம் குறித்த பாடங்கள் தேவைப்படும் சபை

## (1 கொரிந்தியர் 8:1-13; 10:14-11:1)

*1 கொரிந்தியர் 8ல் அந்த சபையாரால் கேட்கப்பட்ட மற்றொரு பொதுவான கேள்விக்கு பவுலின் பதில் உரை: "விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை புசிக்கிற விஷயத்தைப் பற்றி என்ன?"*[1] *சற்று இடைவெளிக்குப் பிறகு அவர் 10:14ல், 9:1-10:13 ஆகிய வசனங்களைக் கடந்து இதே போன்ற பிரச்சனைகளை எப்படி சரி செய்வது குறித்தும் விக்கிரகாராதனை எப்படிப்பட்ட அழிவைக் கொண்டுவரும் என்பது பற்றிய உதாரணத்துடனும் தொடர்கிறார்.*

விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவை பற்றிய பாடம் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்திருக்க வேண்டும். பட்டணம் முழுவதும் விக்கிரகங்கள் ஊடுருவியிருந்தன. அது வெறும் தொழுகைக்கான வழியாக இல்லாமல்; வாழ்க்கைக்கான வழியாக இருந்தது. அந்த சமுதாயத்திலே கிறிஸ்தவர்கள் எப்படி வாழ வேண்டியவர்களாயிருந்தனர்? உதாரணமாக, ஒரு விக்கிரக கோயிலுக்கு அவர்கள் போய், ஒரு ஐக்கிய விருந்துக்காக தங்களுடைய நண்பர்களை சந்தித்து, விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளை புசிக்கலாமா? விக்கிரகமானது ஒன்றுமில்லை என்று அறிந்திருந்தும் கிறிஸ்தவர்கள் விக்கிரக கோவில்களில் பலி செலுத்தப்பட்ட மாம்ச விருந்துகளில் பங்குபெறுவது தவறாக கருதப் பட்டதா? சந்தைகளிலுள்ள கடைகளிலே வாங்கப்படும் மாமிசம் விக்கிரகங்களுக்கு பலியிடப்பட்டவையா என்று கேட்டு வாங்க வேண்டுமா? ஒரு அவிசுவாசி கிறிஸ்தவனுக்கு உணவு பரிமாறும் போது உணவில் வைக்கப்படும் மாமிசத்தை, அந்த கிறிஸ்தவன் புசிக்கலாமா?

பவுல் இந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் அளிக்கும் அதே வேளையில், கிறிஸ்தவ சுயாதீனத்தை முறையாக பயன்படுத்துவதும், தவறாகப் பயன் படுத்துவதும் பற்றிய போதனையையும் போதித்தார்.

### கிறிஸ்தவர்கள் சுயாதீனம் கொடுக்கப் பட்டிருக்கிறார்கள் (8:1-6)

கிறிஸ்தவர்கள் சிலகாரியங்களைச் செய்ய உண்மையிலேயே சுயாதீனம் பெற்றிருப்பது போன்றவற்றை, மற்ற கிறிஸ்தவர்கள் அதைத் தவறாக நினைத்தாலும் கூட, மறைமுகமாக பவுல் குறிப்பிடுகிறார். அவர்,

> விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைக் குறித்த விஷயத்தில், நம்மெல்லாருக்கும் அறிவுஉண்டென்று நமக்குத் தெரியுமே. அறிவு

இறுமாப்பை உண்டாக்கும். அன்போ பக்தி விருத்தியை உண்டாக்கும் ...[2]

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை புசிக்கிற விஷயத்தைப் பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை என்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம். வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப் படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு. அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம் (8:1-6).

பவுல் பழைய ஏற்பாடு போதிக்கும் ஒரே தெய்வ வழிபாட்டைக் குறித்து பேசுகையில் (காண்க உபாகமம் 6:4), பொய்யான தேவர்கள் அல்லது "தேவர்கள் எனப்படுவோர்" இருப்பதாக பவுல் ஒப்புக் கொண்டுவிட்டார். "விக்கிரகமானது ஒன்றுமில்லை" என்று அவர் சொல்லுவதன் பொருள் உண்மையில் அப்படி ஒன்றும் இருப்பது இல்லை என்பது தான்; அவைகளுக்கு உயிரும் இல்லை பெலனும் இல்லை.

விக்கிரகமானது ஒன்றுமில்லை என்பதால், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகள் விக்கிரகங்களால் தீட்டுப்படுவதில்லை. ஒரு துண்டு மாமிசத்தை ஒரு கல்லின் மேல் வைப்பதால் அந்தக்கல் (அல்லது பாறை) ஆவிக்குரிய ரீதியில் மாமிசத்தை தீட்டுப்படுத்திவிடுமா? விக்கிரகம் கல்லைக் காட்டிலும் அதிகம் அல்ல. ஒரு மாமிசத்துண்டை விக்கிரகத்துக்கு சம்பந்தப் படுத்தி முன் வைப்பதால் தீமையானதாகி விடாது. வசனம் 8ல் பவுல், "போஜனமானது நம்மைத் தேவனுக்கு உகந்தவர்களாக்க மாட்டாது" என்று விளக்கமளித்தார். பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட (உணவை) போஜனத்தைக் குறித்த எந்தப் பிரமாணமும் கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தாது (1 கொரிந்தியர் 10:19, 25; மாற்கு 7:19; ரோமர் 14:14 ஒப்பிடவும்). ஆதலால், இந்த சகோதரர்கள் எதை வேண்டுமானாலும் (அவைகள் ஒரு விக்கிரகத்திற்கு படைக்கப் பட்டதாயிருந்தாலும்) சிலர் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளா விட்டாலும், புசிக்க சுயாதீனம் பெற்றிருந்தார்கள்.

## கிறிஸ்தவ சுயாதீனம் தவறாக பயன்படுத்தப்படலாகாது (8:7-13; 10:14-29)

கிறிஸ்தவர்கள் தங்கள் சுயாதீனத்தை தவறாகப் பயன்படுத்தும் எண்ணமுடையவர்களாயிருந்ததால், பவுல் இந்த நிருபத்தின் இந்தப் பகுதியை எழுதுவதில் முதன்மையான கவனம் செலுத்தி எழுதினார். கிறிஸ்தவ சுயாதீனம் தவறாகப் பயன்படுத்தப்படக்கூடுவதற்கான மூன்று வழிகளை அவர் விளக்கப்படுத்துகிறார்.

முதலாவதாக, "உங்கள் சுயாதீனத்தை ஒரு சகோதரனின் இடறுதலுக்கு ஏதுவாக பயன்படுத்தும்போது, அது தவறாக பயன்படுத்துவதாக இருக்கிறது" (8:9-13) என்று அவர் கூறினார்.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை புசிப்பது உண்மையில் தவறு

இல்லை என்று விளக்கப்படுத்திய பிறகு, ஆகிலும் எல்லாரும் இந்த விஷயத்தை அறிந்து கொண்டிருப்பதில்லை என்று பவுல் தொடர்ந்து சொல்லுகிறார். சபை குழுமத்திலுள்ளவர்களில் சிலர் கிறிஸ்தவராவதற்கு முன்பு, விக்கிரகங்களை வணங்குவதில் பழகியிருந்தனர். அவர்கள் அவர்களுடைய மரம் மற்றும் கற்களால் உருவாக்கப்பட்ட சிலைகளுக்கு ஏதோ பெலன் இருப்பதாக அவர்கள் நினைத்திருந்தனர். அவர்கள் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்திருந்தாலும், அவர்களின் கடந்தகால அஞ்ஞான பழக்க வழக்கங்கள் இன்னமும் அவர்களின் மனச்சாட்சியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. ஒரு விக்கிரகத்துக்கு பலிசெலுத்தும் போது, அந்த விக்கிரகத்தின் பிரசன்னத்தால் அந்த மாமிசம் ஆவிக்குரிய ரீதியில் பாதிப்படைகிறது என்று அவர்கள் நினைத்தார்கள். இதன் விளைவாக, அவர்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளை புசிக்கிறபோது. அவர்கள் ஏதோ தவறு செய்தது போலவும், அதினால் அவர்களுடைய மனச்சாட்சியில் தீட்டுப் பட்டது போலவும் நம்புகின்றனர்.[3]

தன்னைப் போன்று மற்றவர்களையும் கருதிக் கொண்டுள்ள ஒரு கிறிஸ்தவன் தன்னைக் காட்டிலும் அதிக (வேத) அறிவைப் பெற்ற மற்றொரு கிறிஸ்தவன் "ஒரு விக்கிரக கோவிலில்," ஒரு விக்கிரகத்துக்கு படைக்கப்பட்ட மாமிச உணவை புசித்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு காட்சியை பவுல் எண்ணிப் பார்க்கிறார். விக்கிரகங்களுக்கு கனத்தைக் கொடுக்கும்படியாக கட்டப்பட்ட கோவில்களில் ஐக்கியவிருந்து அறைகளுக்குச் சமமானவைகளாக கட்டப்பட்டிருந்தன; இந்த இடங்களில் கூடிவரும் ஜனங்கள் விழாக்கால விசேஷங்களில் உணவருந்தும் இடமாகப் பயன்படுத்துவர். ஒருவேளை கிறிஸ்தவர்களும் இந்த இடங்களில் உணவு உண்ணும்படி அழைக்கப்பட்டிருந்தார்கள். அங்கே பரிமாறப்படும் உணவுகள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாமிச உணவுகளாக இருக்கும். அறிவார்ந்த கிறிஸ்தவன் தான் புசிக்கிற உணவு விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவையென்ற உணர்வே இல்லாமல் அந்த உணவை மிகவும் சுவைத்து (அனுபவித்து) புசிக்கிறான். இதைக் கண்ணுறும் குறைவான அறிவு பெற்ற ("பலவீனமுள்ள"; 8:11) கிறிஸ்தவன் அதைக் கண்ணுற்று தனக்குள், "அவர் புசிப்பாரேயானால், நானும் புசிப்பேன்" என்று எண்ணிக் கொள்கிறான். பிறகு அவன் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாமிச உணவுகளில் கொஞ்சத்தைப் புசிக்கிறான் - அவன் புசிக்கும் போது, அவனுடைய மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்துகிறது: "நீ விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்ட மாமிசத்தைப் புசித்துக் கொண்டுள்ளாய்; நீ தவறு செய்து விட்டாய்" என்று சொல்லுகிறது. ஆதலால் அவன் பாவஞ் செய்கிறான்,[4] என்ற உணர்வால் "கெட்டுப் போகிறான்" (8:11; காண்க ரோமர் 14:15, 23).[5]

இந்தப் பாவத்தை பொருத்தமட்டில் யாருடைய தவறாக இருக்க முடியும்? வேத அறிவைப் பெற்ற சகோதரனுடைய தவறு என்பதாக பவுல் சொன்னார்: "பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவினிமித்தம் கெட்டுப்போகலாமா? அவனுக்காக கிறிஸ்து மரித்தாரே. இப்படிச் சகோதரருக்கு விரோதமாய் பாவஞ் செய்து, பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியை புண்படுத்துகிறதினாலே, நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய் பாவஞ்செய்கிறீர்கள்" (8:11, 12).

இந்தக் காட்சியில், வேத அறிவைப் பெற்ற சகோதரன் என்ன செய்திருக்க வேண்டும்? தனது செயல்கள் ஒரு சகோதரனை பாவஞ் செய்ய வைக்கிறது என்பதையும், விக்கிரகங்ளுக்குப் படைக்கப் பட்டவைகளைப் புசிக்க தான்

சுயாதீனம் பெற்றிருந்தாலும், அவற்றைச் சாப்பிடாமல் விலகியிருந்திருக்க வேண்டும். வசனம் 13ல் தன்னையே உதாரணமாகப் பயன்படுத்தி: "ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாமிசம் புசியாதிருப்பேன்." [6]

பவுலின் போதனையை நமக்கு எப்படிப் பயன்படுத்துவது? கிறிஸ்தவர்கள் அநேக செயல்களைத் தவறானதாக நினைத்தனர். உதாரணமாக, ஆராதனையைக் குறித்து எண்ணற்ற கேள்விகள் எழுந்துள்ளன. ஸ்திரீகள் ஆராதனையில் கூடிவரும் போது முக்காடிட்டுக் கொள்வது அவசியமா? கர்த்தருடைய பந்தியில் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களை (சிறிய கப் களை) பயன்படுத்துவது தவறா? இப்படி எவ்விதக் கேள்வி எழுப்பப் பட்டாலும் - சம்பந்தப்பட்ட பிரச்சனையில் ஒருவர் சரியானவராகவே இருந்தாலும், அது குறித்து சரியான அறிவைக் கொண்டிருந்தாலும் - தனது செயல்பாடுகள் மற்ற கிறிஸ்தவர்களை பாவம் செய்ய வைத்து விடுமோ என்று பரிசீலிக்க வேண்டும். அப்படியிருக்குமாயின், அப்படிப்பட்ட செயலைச் செய்யாமல் விலகியிருக்க வேண்டும். வசனம் அவர் அதைச் செய்ய அனுமதித்தாலும் கூட அவர் விலகியிருப்பது நலம்.

பவுல் இங்கே ஒரு சகோதரனை இடறலடையச் செய்வது குறித்து - அதாவது பாவஞ் செய்யப் பண்ணுவது குறித்து பேசுகிறார் என்பதை நாம் உணரவேண்டும் (8:11) - அவரை "மனவருத்தப் படுத்துவதல்ல." யாராவது அவருக்கு விருப்பமில்லாத செயலைச் செய்து அவரை மனவருத்தம் அடையச் செய்கிற காரியத்தை அப்போஸ்தலன் சிந்திக்கவில்லை. மற்றவர்கள் தவறு செய்வதாக நினைக்கும் சகோதரர்கள் தங்களுடைய செயல்களால் பாவஞ் செய்கிறவர்கள் தங்களுடைய எண்ணங்களை சபையின்மேல் சாற்றிவிடக் கூடாது. எப்படியாயினும், இந்த விதியின் தகுதியாம்சம் விதியை வெறுமையாக்குவதில்லை. அதிகமான அறிவைப் பெற்ற கிறிஸ்தவன் மற்றவர்களைப் பாவம் செய்யப் பண்ணுகிற அளவுக்கு தங்கள் சுயாதீனத்தை தவறுதலாகப் பயன்படுத்தக் கூடாது.

*இரண்டாவதாக, "தவறான காரியங்களில் பங்குபெறுவதன் மூலம் உங்கள் சுயாதீனத்தை தவறுதலாக பயன்படுத்தக்கூடும்" என்று பவுல் சொன்னார்* (10:20-22). கிறிஸ்தவ சுயாதீனத்தைக் குறித்து தொடர்ந்து பவுல் பேசுகிறார், முதல் பார்வையில் பவுல் தாமே முரண்படுவதாக காணப்படுகிறார். விக்கிரக கோயில்களில் விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவைகளைப் புசிப்பது தவறல்ல என்று ஏற்கனவே சொல்லியிருந்தார்; ஆனால் இங்கே "அப்படிப்பட்ட கோயில்களில் இருப்பதே தவறு" என்று சுட்டிக் காட்டுகிறார். "நீங்கள் அங்கே இருந்தால், நீங்களும் விக்கிரக ஆராதனையில் ஐக்கியம் கொள்ளுகிற அஞ்ஞானிகளில் ஒருவராக உங்களைக் காட்டும்."

இது முரண்பாடானதா? இல்லை, அதிகாரம் 8ல், பவுல் *விக்கிரக கோயில் வளாகத்தில் உள்ள விருந்து அறைகளில் அவர்களோடு அமர்ந்து புசிப்பதைக் குறித்துப் பேசினார்.* இந்த உணவு, மார்க்க ரீதியான எந்த கூடிவருதலுக்கும் சம்பந்தமில்லாதது. அதிகாரம் 10ல் *விக்கிரகம் வைக்கப்பட்டுள்ள அறையில் அவைகளுக்கு முன்பாக படைக்கப் பட்டதால் புனிதமான போஜனமானக் கருதி அங்கேயே புசிக்கிற உணவைக் குறித்து பேசுகிறார்.*[7] இந்தக் கண்ணோட்டத்தை மூன்று உண்மைகள் உறுதிப்படுத்துகின்றன: (1) "விக்கிரகாராதனைக்கு விலகியோடுங்கள்" என்று சொல்லி இந்தப் பத்தியை பவுல் ஆரம்பிக்கிறார்

*(10:14) - அதாவது "விக்கிரக ஆராதனையை தவிருங்கள்" என்று கூறுகிறார். (2) அவர்களின் விக்கிரக விருந்துண்ணலை பவுல், கிறிஸ்தவர்கள் பங்கு பெறும் கர்த்தருடைய பந்திக்கும் யூதர்கள் பங்கு பெற்ற பலிகளை புசிப்பதற்கும் ஒப்பிடுகிறார் (10:16-18). ஒன்றுக் கொன்று இணையான இந்த ஒப்பிடுதல், அஞ்ஞானிகளின் மத சம்பந்தப்பட்ட விருந்தைப் பற்றி பவுல் கூறிக் கொண்டிருந்தார் என்று காட்டுகின்றன. (3) "பேய்களுடைய பந்திக்கும்" "கர்த்தருடைய பந்திக்குமுள்ள" வேறுபாட்டையும் பவுல் குறிப்பிடுகிறார் (10:21). மீண்டுமாக, "பேய்களுடைய பந்தி" என்பது மதசம்பந்தப்பட்ட விருந்தில் நெருக்கமாக பங்கு பெறுவதைக் குறிப்பிடுகிறது.*

*ஆகையால், ''விக்கிரகமோ,'' ''விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளோ" ஒன்றுமில்லை என்பதால், ஒரு விக்கிரகத்துக்குப் படைக்கப் பட்ட மாமிச போஜனத்தைப் புசிப்பது தவறு இல்லை (10:19), அஞ்ஞான மதரீதியான போஜனத்தில் அல்லது விருந்தில் விக்கிரகங்களுக்கு படைப்பதற்குச் சமமாக பங்கு பெறுவது பாவம். விக்கிரகமானது ஒன்றுமில்லை என்று அறிந்தும் பெருமையாயிருந்த கொரிந்தியர்கள் ஒருவேளை, "விக்கிரங்கள் மூலம் செயல்படுவதாக நினைக்கப் பட்ட தேவர்கள் உண்மையில் இல்லை, அஞ்ஞானிகள் மதத்தின் பக்தியாய் அவைகளுக்கு இடும் பலிகள் அர்த்தமற்றவை. ஆகையால், நான் விரும்பினால் அப்படிப்பட்ட மதம் சார்ந்த சேவைகளில் நானும் ஒரு அங்கமாக இருக்க விரும்புகிறேன்," என்று வாதிட்டிருக்கலாம். எந்த வகை சேவைகளில் பங்கு பெற்றாலும், அதைக் குறித்து அவர்கள் வாதிடுவதை பவுல் வன்மையாகக் கண்டித்து, அது அவர்கள் பிசாசுகளுடன் கொள்ளும் ஐக்கியம் என சுட்டிக் காண்பிக்கிறார் (10:21)! தேவன் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறார், தம்முடைய மக்கள் தம்மை மட்டுமே தொழுது கொள்ள வேண்டும் என அவர் விரும்புகிறார் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாய் இருந்தார்கள் (10:22).[8]*

*நாமும் கூட, நமது கிறிஸ்தவ சுயாதீனம் என்பது தெளிவற்ற ரீதியில் பயன்படுத்தி நமக்குப் பிரியமான வகையில் செயல் படுத்துகிற சுயாதீனமல்ல என்பதை மனதில் கொள்ள வேண்டும். இன்று மதசார்பு செயல்பாடுகளை தாம் அங்கீகரிக்காத வகையில் பயன்படுத்திக் கொள்வதற்காக தேவன் நமக்கு சுயாதீனத்தைக் கொடுக்கவில்லை.[9]*

*<u>மூன்றாவதாக, உங்கள் அயலானை இடறலடையச் செய்கிற வகையில் உங்கள் சுயாதீனத்தை பயன்படுத்துவது தவறாகப் பயன்படுத்தலாகும் என்று அவர் குறிப்பிடுகிறார்</u> (10:23-29அ).*

*பவுல் தனது உபதேசங்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கும் சிலருக்கு பதில் கொடுக்கிறார். அறிவார்ந்த ஒருவர், "விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவைகளை புசிப்பதால், மற்றவர்களுக்கு எப்படிப்பட்ட பாதிப்புக்களை ஏற்படுத்தினாலும், எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு; எனவே விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை நாம் புசிக்கலாம்" என்று சொல்லக்கூடும். பவுல் அவர்களுக்குப் பதிலளித்து, "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் எனக்குத் தகுதியாயிராது, எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்தி விருத்தியை உண்டாக்காது" என்று சொன்னார் (10:23). ஒரு செயலைச் செய்வதற்கு அதிகாரம் இருந்தாலும், கிறிஸ்தவர்கள் மற்றவர்களை இடறலடையச்*

செய்யாமல் அவர்களையும் விருத்தியடையச் செய்பவர்களாயிருக்க வேண்டும் என்று அவர் சொன்னார். நாம் நமது அயலார்களுக்கு நல்லதையே நினைக்க வேண்டும் (10:24).

தேவன் கொடுத்த - இந்த கட்டளையை குறிப்பிட்ட இரண்டு சூழ்நிலைகளுக்குப் பவுல் பயன்படுத்தினார். அவர், "கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப் புசியுங்கள்; மனச்சாட்சியினிமித்தம் நீங்கள் எதையும் விசாரிக்க வேண்டியதில்லை" இதினால் ஒருவருடைய மனச்சாட்சியும் இடறலடையாது என்று கிறிஸ்தவர்களிடம் கூறினார் (10:25 ஐக் காண்க). இப்படிப்பட்ட சுயாதீனம் அவர்களுக்கு ஏன் அனுமதிக்கப் பட்டது? ஏனெனில் காணப்படும் அனைத்தும் தேவனிடத்திலிருந்து வந்தவை (10:26).

அடுத்ததாக, பவுல், "நீங்கள் அவிசுவாசமுள்ள உங்கள் அயலானுடைய வீட்டில் விருந்துண்ணும்போது, எதையும் விசாரியாமல் உங்கள் முன் வைக்கப் படுகிற எதையும் புசியுங்கள். ஆகிலும் உங்களுக்கு விருந்தளிப்பவனோ அல்லது விருந்துண்கிற வேறு யாராகிலுமோ 'இது விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டது' என்று அறிவித்தால், புசியாதிருங்கள்" (10:27, 28அ). இந்த உபதேசம் ஏன் முக்கியமானது? "உங்களுக்கு அறிவித்தவனிமித்தமும் மனச்சாட்சியினிமித்தமாகவும்; . . . உங்களுடைய சொந்த மனச்சாட்சியினிமித்தமல்ல, பிறனுடைய மனச்சாட்சியினிமித்தமாகவுமே" (10:28ஆ, 29அ).

பவுல் இங்கே குறிப்பிடுகிற நபர் ஒரு பெலவீனமான சகோதரன் மீது காட்டும் கரிசனத்தால் அல்ல, ஒரு அவிசுவாசியைக் குறித்து தான். அவர், "நீங்கள் விக்கிரகத்திற்கு படைக்கப்பட்ட மாமிசம் புசிப்பதால் அவனுடைய மனச்சாட்சி பெலவீனப்படுமேயாகில், புசியாதிருங்கள்" என்று கிறிஸ்தவர்களுக்குச் சொல்லுகிறார். பந்தியிருக்கும் அவிசுவாசி கிறிஸ்தவனிடத்தில் புசிக்கிற அந்த மாமிசம் எங்கிருந்து வந்தது என்று விளக்கமளிப்பதின் மூலம் அப்படிப்பட்ட ஒரு மாமிசத்தை கிறிஸ்தவன் புசிக்கக்கண்டதால் அவனது மனச்சாட்சி பெலவீனப்படுவதை (பாதிக்கப்படுவதை) காட்டுகிறது. ஆதலால், அந்த விருந்தில் புசிக்கப் போகிற மாமிசம் விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவை என்று கூறியதால், கிறிஸ்தவன் அதைப் புசிக்கக் கூடாது.

கிறிஸ்தவ சுயாதீனத்தை பயன்படுத்தி அப்படிப்பட்ட மாமிசத்தை தாங்கள் புசிப்பதால் மற்ற கிறிஸ்தவர்களின் பிரதிபலிப்பு பெலவீனப்படும் என்பதைக் குறித்து கிறிஸ்தவர்கள் சிந்திப்பதோடு. அவிசுவாசிகள் எப்படி பிரதிபலிப்பார்கள் என்பதையும் பரிசீலிக்க வேண்டும். நமக்கு அதிகாரம் இருக்கிறது என்பதற்காகவே ஏதோ ஒன்றைச் செய்வதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்வது - சபையில் இருப்பவர்களும் உலகத்தில் இருப்பவர்களும் எப்படியாயினாலும் பரவாயில்லை எனும் எண்ணம் - நமது கிறிஸ்தவ சுதந்திரத்தை சுயாதீனத்தை தவறாகப் பயன்படுத்துவதுதான்.

**கிறிஸ்தவ சுயாதீனம் குறிப்பிட்ட சில கோட்பாடுகளால் ஆளப்படுகிறது (10:29ஆ-11:1)**

பவுல் கிறிஸ்தவ சுயாதீனத்தைக் குறித்த தனது விவாதத்தை (10:29-11:1ல்) நிறைவு செய்கிறார். இந்த வசனப் பகுதியில் (6:12யும் அல்லது 10:23யும் ஒப்பிடுக), தன்னுடைய உபதேசங்களை ஆட்சேபிக்கிற

*ஜனங்கள் இருக்கக் கூடும் என்று குறிப்பிடுகிறார். அறிவு பெற்ற அவர்கள் - விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை புசிப்பதற்கு தேவன் தடை விதிக்க வில்லை என்று அறிந்தவர்கள் - மேலே தான் எழுதியிருப்பதை ஆட்சேபிப்பதாக பவுல் யூகம் பண்ணுகிறார். “அது அநியாயம்!” என்று கிறிஸ்தவர்கள் பதிலளிக்கக் கூடும். “என் சுயாதீனம் மற்றொருவனுடைய மனச் சாட்சியினாலே குற்றமாய் எண்ணப்பட வேண்டுவதென்ன? மேலும் நான் அதை ஸ்தோத்திரிப்புடனே அநுபவித்தால், ஸ்தோத்திரித்து அனுபவிக்கிற பொருளைக் குறித்து நான் தூஷிக்கப்படுவானேன்?” (10:29ஆ, 30).*

*அப்படிப்பட்ட மக்களின் கெட்ட மனப்பாங்காக நாம் அவர்களை கடிந்து கொள்ள சாயக்கூடும். கிறிஸ்தவர்கள் தங்கள் சுயாதீனத்தை உபயோகிப்பதை ஆள்வதற்காக பவுல் இரண்டு கோட்பாடுகளை முன் வைப்பதின் மூலம் பதிலளிக்கிறார். இந்தக் கோட்பாடுகள் ஒரு கிறிஸ்தவனின் அனைத்து செயல் பாடுகளுக்கும் ஒரு வழிகாட்டவேண்டும்.*

***“எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்”***

*புசித்தாலும் குடித்தாலும் அல்லது வேறு எதைச் செய்தாலும், அவைகள் தேவனை மகிமைப்படுத்தும் வகையிலேயே நடந்துகொள்ளுகிறார்கள் என்பதை கொரிந்து சகோதரர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். சுய நன்மைகளையும், சொந்த சுயாதீனத்தையும், தனது வயிறையும், தனது உணவை (போஜனத்தை) யும் அல்லது புசிப்பதற்கான தனது (உரிமை) அதிகாரத்தையுமே எண்ணிக் கொண்டிருப்பவன் தேவனுடைய மகிமையைக் குறித்துச் சிந்திப்பதில்லை என்பது தெளிவாய்க் காணப்படுகிறது (காண்க 10:31).*

***“யாருக்கும் எந்த இடறலையும் ஏற்படுத்தாதிருங்கள்”***

*அவர்கள் யாருக்கும் எந்த இடறலையும் - அவிசுவாசமுள்ள யூதர்களுக்கோ அல்லது கிரேக்கர்களுக்கோ, அல்லது சபையிலுள்ள யாருக்காகிலுமோ ஏன் இடறலை ஏற்படுத்தக் கூடாது? பவுல் மாதிரியை பின்பற்றி மற்றவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி நடந்து கொள்வதன் மூலம் அவர்களும் இரட்சிக்கப் படக்கூடும் (10:32, 33; 11:1).*

*கிறிஸ்தவர்களாகிய நமக்கு சுயாதீனம் கொடுக்கப் பட்டுள்ளது; ஆகிலும் மேலே குறிப்பிட்ட இரண்டு பெரிய அக்கரைகளுக்கு அப்பால் நமது சுயாதீனத்தை பயன்படுத்திவிடக் கூடாது. தீர்மானிக்கும் போது நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி, நான் இப்பொழுது செய்யப் போகிற காரியம் தேவனுக்கு மகிமையளிக்குமா? மற்றும் மற்ற கிறிஸ்தவர்களுக்கும் அவிசுவாசிகளும் எனது செயல் பிரயோஜனமானதாக அல்லது பலனுள்ளதாக இருக்குமா?*

## *முடிவுரை*

*அநேக உள்ளூர் சபைகளில், வித்தியாசப்பட்ட பிரச்சனைகளில் அங்கத்தினர்கள் ஒத்துப்போகாத சூழல் அவ்வப்பொழுது ஏற்படலாம். கிறிஸ்தவர்களாகிய நாம், எதை வேண்டுமானாலும் விசுவாசிக்க சுயாதீனம் அளிக்கப்படவில்லை. அல்லது எந்தச் சுழ்நிலையிலும் எதை வேண்டுமானாலும் செயல் படுத்திக் கொள்ள இயலாது, ஆனால் ஒவ்வொரு*

*கிறிஸ்தவனுக்கும் தேவன் போதிய அளவு சுயாதீனத்தைக் கொடுத்து அவரவர் தன் கண்ணோட்டத்தைப் பற்றிக் கொள்ளவும் அனுமதிக்கிறார். நமது கிறிஸ்தவ சுயாதீனத்தை காத்துப் பற்றிக் கொள்ளவும், மற்றவர்கள் நமது கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாத போதும் அவர்களுக்கு மதிப்புக் கொடுக்கவும் வேண்டும்.*

*அதே வேளையில், வேதவசனங்களால் ஆதரிக்கக் கூடியதால் சில காரியங்களைச் செய்து அதனால் கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள் பாவஞ் செய்யவோ அல்லது நமது நண்பர்கள் இரட்சிக்கப் படவோ தடையான காரியங்களைச் செய்யாதபடிக்கு நம்முடைய சுயாதீனத்தை துஷ்பிரயோகம் செய்யாத படிக்கும் நம்மை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக நாம் இந்த இரண்டு பெரிய கோட்பாடுகளால் எல்லாவற்றிலும் வழி நடத்தப்பட வேண்டும். நாம் எதைச் செய்தாலும் அது தேவனை மகிமைப்படுத்தக் கூடியதாயிருக்க வேண்டும். மற்றும் மற்றவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்க வேண்டும். இந்த வழிகாட்டு கோடுகளால், நாம் நடத்தப்படுவோமாகில் நாம் பவுலையும் பின்பற்றுவோம் கிறிஸ்துவையும் பின்பற்றுகிறவர்களாவோம்.*

---

*குறிப்புகள்*

[1]*ஒரு விக்கிரக கோவிலில் அனுசரித்த விக்கிரக - ஆராதனையைக் குறித்த பிரச்சனை எழும்பிற்று. விக்கிரக ஆராதனை செய்கிற ஒருவர் அந்த கோவிலுக்குப் போய் சம்பந்தப்பட்ட கடவுளுக்கு மிருகபலி செலுத்துவார். பலிபீடத்தின் மீது பலிசெலுத்தப்பட்ட மிருகத்தின் ஒரு சிறுபகுதி தகனிக்கப்பட்ட பின்பு, மாமிசம் ஆசாரியனுக்கும் பலியிட்டவருக்கும் பிரித்துக் கொடுக்கப்படும். ஏதாவது மீந்திருந்தால் அதைக் கொண்டு வந்து சந்தைகளில் விலைபேசி விற்கப்படும்.* (Darrell Conley, *1 Corinthians,* The Living Way [Shreveport, La.: Lambert Book House, 1975], 55.) [2]*எல்லாருக்கும் அறிவுண்டு என்று பவுல் சொன்னார் - அந்த அறிவு தேவன் ஒருவரே, விக்கிரகமானது ஒன்றுமில்லை என்பது தான். பின்னர் எல்லாருக்கும் இந்த அறிவு இல்லை என்று சொன்னார் (8:7). பவுல் எல்லா கொரிந்து கிறிஸ்தவர்களும் கர்த்தராகிய தேவனை விசுவாசித்தார்கள். கொள்கையளவில் அவர் ஒருவரே தேவன் என்று ஏற்றுக் கொண்டிருந்தனர், இருந்தும் இந்த ஒரு தெய்வ வழிபாட்டு முறைகளை எல்லாரும் புரிந்து கொண்டிருக்கவில்லை என்று பவுல் சொல்லுவதை புரிந்து கொண்டிருப்போமாகில், மேற் சொன்ன இரண்டு வாக்கியங்களையும் ஒப்புரவாக்கிப் பார்க்க முடியும். 8:1-3ல், இந்த அறிவு எவ்வளவு முக்கியமோ அதற்குமேல் அன்பு முக்கியமானது என்று அவர் குறிப்பிடுகிறார். சிலர் தங்களுடைய அறிவினிமித்தம் இறுமாப்புடையவர்களாயிருந்து அன்பிலே குறைவுள்ளவர்களாயிருந்தனர்.* [3]Raymond C. Kelcy, *First Corinthians,* The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1967), 250. [4]*ரோமர் 14:23 தனது மனச்சாட்சிக்கு விரோதமாய் ஒருவன் எதைச் செய்தாலும், அவன் பாவஞ் செய்கிறான் என்கிறது.* [5]*விக்கிரக கோயில்களில் (வளாகத்தில்) புசிப்பதை தன்னில்தானே தவறு என்று பவுல் சொல்லவில்லை; அச்செயல் மற்றொரு சகோதரனை பாவஞ் செய்யப் பண்ணுமானால் அதுவே தவறு என்றார். அதிகாரம் 11ல் வித்தியாசப் பட்ட சூழ்நிலையை பவுல் பேசுகிறார் - அஞ்ஞான மத பண்டிகை விருந்துகளில் ஒரு கிறிஸ்தவன் பங்கேற்பதைக் குறித்து பவுல் பேசுகிறார். மேலே குறிப்பிடப் பட்டதற்கு ஒப்பான ஒரு கண்ணோட்டத்தை ரிச்சர்டு ஓஸ்டர் குறிப்பிட்டார்.* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co.,

1995], 199.) *மற்ற விளக்கவுரையாளர்கள், பவுல் விக்கிரகக் கோயில்களில் கிறிஸ்தவன் பந்தியிருப்பதை ஏற்றுக் கொண்டிருப்பாரா என்பதில் ஒத்துக் கொள்வதில்லை.* (James Burton Coffman, *Commentary on 1 and 2 Corinthians* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977], 126.) [6]*பவுல் தொடர்ந்துத் தன்னையே மாதிரியாக வைத்து அதிகாரம் 9ல் இந்தக் கருத்தை விளக்கப் படுத்துகிறார்.* [7]*"விக்கிரகாராதனைச் சூழ்நிலைகளில் கிறிஸ்தவர்கள் பங்கு பெறும் மத சம்பந்தப்பட்ட" விருந்துகளும் உட்படுத்தப் பட்ட சம்பவங்கள் இவை* (Oster, 241-42). [8]*ஏற்கனவே பவுல் இந்த நிருபத்தில் கேள்வி கேட்டு பதில் கொடுத்தது போலவே வசனம் 22-லும் பயன்படுத்துகிறார். "நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா?" இதன் கருத்து என்னவெனில், கொரிந்தியர்கள் அஞ்ஞான மதத் தொழுகையில் பங்கேற்று, கர்த்தருக்கு எரிச்சலை கொடுப்பார்கள். "அவரைக் காட்டிலும் அவர்கள் பலவான்கள் அல்லாததால்," அவர்கள் இப்படி அவரை கோபப்படுத்துவார்களானால் அவருடைய தண்டனையை அவர்கள் தாங்க முடியாது.* [9]*சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணும் நோக்கத்தோடு அப்படிப்பட்ட மத பண்டிகைகளிலே கலந்து கொள்ளக்கூடும், அல்லது பங்கேற்பவராக இராமல் கவனிப்பாளராகக் கலந்து கொள்ளக் கூடும்.*